பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 13உ (27—6—67) செவ்வாய் ★ வெளியூர்: ஆனி 14உ (28—6—67) புதன் [இதழ்: 11

'நம் நாடு' நாளை இதழில்!

'மந்திரிகள் மீது அரோரா' என்ற தலைப்பில் ஆசிரியர் இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. எழுதிய முக்கியக் கட்டுரை ஒன்று நாளை (சென்னை 28-6-67) 'நம் நாடு' இதழில் இடம் பெறுகிறது.

தொடர் கதையாக நம் போராட்டம்

சர்வாதிகாரம் சாயும் வரை நீடிக்கும்

தமிழ் கோலோச்சும் நிலை கண்டு இந்தி அடங்கி ஒடுங்க வேண்டும்

ம, பொ. சி. பிறந்த நாள் விழாவில் அறிஞர் அண்ணா உரை

சென்னை, ஜூன் 26—

இந்தியத் துணைக் கண்டத்தில் காங்கிரசுக் கட்சியின் சர்வாதிகாரப் போக்கு சாய்க்கப்பட வேண்டும்; இந்தியைப் புகுத்தும் மத்திய அரசுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும்.

"மத்திய அரசில் குவிந்திருக்கும் அதிகாரங்களை மாநில அரசுகளுக்குப் பகிர்ந்து அளிப்பதால்—மாநில அரசுகள் முழு உரிமை பெறுவதால்—தன்னாட்சி செய்வதால் நாட்டின் மொத்த ஐக்கியத்திற்குக் கேடுவிளையாது.

"ஆகவே, 'மாநிலங்கள் முழு உரிமை பெறவேண்டும்' என்று கோரி, தேர்தல் நேரத்தில் தோழமைக் கட்சிகளுடன் திரு. ம. பொ. சிவஞானம் கூட்டுச் சேர்ந்து ஒத்துழைப்புக் கொடுத்ததால் கூட்டணிக்குப் புதுவலிவும் தெம்பும் ஏற்பட்டது"

—என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், பாலர் கலைஅரங்கில் நடைபெற்ற ம. பொ. சிவஞானம் அவர்களின் 62-வது பிறந்த நாள் விழாவில் தெரிவித்தார்.

திரு. க. சந்தானம், விழாவிற்குத் தலைமை வகித்தார்.

திரு. ஏ. கே. ஏ. அப்துஸ்சமது எம்.ஏ., எம்.பி., டாக்டர் எச். வி. ஹாண்டே எம்.எல்.ஏ., திரு. ஏ. எஸ். கே. ஐயங்கார், திரு. வி. கே. குப்புசாமி, தி. க. சண்முகம் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

எதிர்க் கட்சித் தலைவர் பி. ஜி. கருத்திருமனும் விழாவில் கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர் கலந்து கொள்ளவில்லை.

திரு. ம. பொ. சிவஞானம், வாழ்த்துக் கூறியவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

அண்ணா அவர்கள், மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"தோட்டத்தில் பூத்திருக்கும் முல்லைக்கு இயற்கையாகவே மணம் உண்டு; அந்த மலரைத் தனித் தனியாகப் பறித்து நுகர்ந்து பார்த்தாலும் நல்ல மணம் கிடைக்கும்; அல்லது மலர்களைக் கோக்க வேண்டியவர்கள் கோத்து—சூடவேண்டியவர் சூடி—மெல்ல நடந்து அசைந்துவரும்போது, இயல்பாக வீசும் பூங்காற்றும் மங்கை சூடிய மலரின் மணமும் எப்படி ஒன்றாகக்கூடிப் புதுக்காற்று ஏற்படுமோ அதுபோலவே கூட்டணி திகழ்ந்தது.

தனித் தனியாக வலிவு பெற்றிருந்த எதிர்க் கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து கூட்டணியில் நின்றதால், தமிழகத்தில் காங்கிரசு ஏகாதிபத்தியத்தைமுறியடிக்கப் புது வலிவு ஏற்பட்டது.

கூட்டணியின் மூலம் கிடைத்த வெற்றியின் காரணமாக எழுந்து நின்ற ஏகாதிபத்தியம் அழித்தொழிக்கப்பட்டது என்று கூறிவிட மாட்டேன்; ஏதோ, ஓரளவு தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது!

ஆனால், காங்கிரசுக் கட்சியின் சர்வாதிகாரத்தை — ஏகாதிபத்தியப் போக்கை நாம் புறமோடச் செய்ய வேண்டும்; அதற்காக நாம் போராட வேண்டும்.

நமது போராட்டம் எப்போதோ நின்றுவிட்ட ஒன்று அல்ல; அது தொடர்கதையாகவே நீடிக்கும்!

தமிழ்மொழி, ஐயத்திற்கு இடம் இல்லாத வகையில் அரியணையில் கோலோச்ச வேண்டும்.

தனித்த ஆட்சி செய்யும் தமிழ் மொழியைப் பார்த்து, ஏகாதிபத்திய இந்தி மொழி, 'தமிழ் மொழி பிறந்த நிலை என்ன? அது வளர்ந்த விதம் என்ன?' என்பதைத் தெரிந்துகொண்டு அடக்க ஒடுக்கமாகப் பாலபாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

மற்றவர் நலனை நாசமாக்காத வகையில் நம் உரிமையை மீட்டாக வேண்டும்.

'நம் நலன் என்பது, எல்லோருடைய நலத்திற்காகவும் தான்' என்ற பண்டைத் தமிழகத்தின் பண்பாட்டுக் கருத்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அனைவரும் உரிமை பெற்றாகவேண்டும்.

அதற்காகப் பாடுபடும் தி. மு. கழகத்துடன்—முல்லை மலர்கள் ஒன்று சேருவதுபோல்—உடன் இருந்து பாடுபடவேண்டும்.

அதற்காக திரு. ம. பொ. சிவஞானம் இன்னும் பல்லாண்டுக் காலம் வாழ நாடு வாழ்த்துகிறது—நாம் வாழ்த்துகிறோம்—தமிழ வாழ்த்துகிறது.

இடைக்காலத்தில் தமிழ் மொழி இழந்ததை இனி மேலாவது பெற்றுத்தர—அதற்கான முயற்சிகளில் ஈடுபட—திரு. ம. பொ. சி. பல்லாண்டு வாழவேண்டும் என வாழ்த்துகிறேன்."

கேரளப் பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கல்வி

தமிழக அரசு உதவி

திருவனந்தபுரம், ஜூன் 25—

கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ்க் கல்விக்காக ஆண்டுக்கு ரூ. 4,000 தமிழக அரசு அனுமதித்துள்ளது.

கருநாடகத்தில் எதிர்க் கட்சிகளின் அறப்போர் வலுக்கிறது!

நேற்றுக் கைதான 250 பேர்களில் கழகத் தோழர்கள் 70 பேர்

பெங்களூர், ஜூன் 26—

கருநாடக மாநில அரசின் தடையுத்தரவை மீறிப் போராட்டத்தில் ஈடுபட்ட 250-க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 70-க்கும் மேற்பட்டவர்கள் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

கருநாடக மாநிலத் தி. மு. கழகத்தைச் சேர்ந்த முன்னணித் தோழர்கள், கடந்த வெள்ளிக்கிழமையன்றே கைது செய்யப்பட்டது நினைவுகூரத்தக்கது.

இன்று சிவாஜி நகரில் 70-க்கும் மேற்பட்ட தி. மு. கழகத் தோழர்கள் அணிவகுத்து அமைதியாக முழக்கமிட்டுக் கொண்டு வந்தபோது அவர்களைப் போலீசார் கைது செய்தனர்.

'சட்டமன்றம் நோக்கிச் செல்வோம்' என்ற அறப்போராட்டம், எதிர்க் கட்சிகளும்—தொழிற்சங்கங்களும் சேர்ந்து நடத்தப்படுவதாகும்.

பிரஜா சோஷலிஸ்டு, சம்யுக்த சோஷலிஸ்டு, வலது பொதுவுடைமைக் கட்சி, ஜனசங்கம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த கருநாடக முன்னணித் தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"மக்களுக்கு எதிரான அரசாங்கமே! ஆட்சிபீடத்திலிருந்து இறங்கு!" என்று ஊர்வலத்தில் வந்தவர்கள் முழக்கமிட்டார்கள்.

[கருநாடக மாநிலம் காங்கிரசுக் கட்சியின் ஆட்சியில் இருக்கிறது.]

கொள்முதலில் முந்திய அரசு காட்டிய சுணக்கம்

பதவியேற்ற அன்று சென்னையில் 500 டன் அரிசிதான் இருந்தது என்பது உண்மை

சட்டமன்றத்தில் அமைச்சர் மதியழகன் விளக்கம்

சென்னை, ஜூன் 27—

"வெளி மாநிலத்துக்கு அரிசி கள்ளக்கடத்தல் செய்யப்படுவதைத் தடுக்க, எல்லையோரங்களில் புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரோந்துப் போலீசுப் படையினரும்—ஆயுதந்தாங்கிய போலீசாரும் 24 மணி நேரமும் கண்காணிக்க உத்தரவிடப்பட்டுள்ளது"

என்று, இன்று சட்டமன்ற கேள்விகட்குப் பதிலளிக்கையில் உணவமைச்சர் மதியழகன் அறிவித்தார்.

"புதிய அரசு பொறுப்பேற்ற அன்று 500 டன் அரிசிதான் கையிருப்பில் இருந்தது என்பது உண்மையா?"

என்று கேட்கப்பட்ட கேள்விக்கு உணவு அமைச்சர் அளித்த விளக்கம் வருமாறு:—

"இந்தக் கேள்வியைத் திருப்பித் திருப்பிக் கேட்பதால் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் பதவியேற்ற அன்று சென்னையில் ஒருநாள் தேவைக்கான அளவில்தான்—500 டன் அரிசிதான் இருந்தது.

"சனவரி, பிப்ரவரி மாதங்களில் 3 இலட்சம் டன் கொள்முதல் செய்திருக்கவேண்டும். முந்திய ஆண்டுகளிலெல்லாம் அப்படிச் செய்துமிருக்கிறார்கள். சென்ற ஆண்டில் மட்டும் என்ன காரணத்தாலோ, சனவரி, பிப்ரவரியில் 1½ இலட்சம் டன்தான் கொள்முதல் செய்யப்பட்டிருந்தது.

"இப்போது 5 இலட்சம் டன் இருப்பில் இருக்கிறது. முந்திய அரசினர் முனைந்து கொள்முதல் செய்திருந்தால் இன்று 7 இலட்சம் டன் இருப்பில் இருப்பதாகப் பெருமையுடன் நாம் அறிவித்திருக்க முடியும்.

"முந்திய ஆண்டுகளில் மார்ச் மாத வாக்கில் 15,000 டன்வரை இருந்திருக்கிறது; ஆனால்,நாங்கள் பதவி ஏற்றபோது 500 டன் அரிசிதான் சென்னையில் இருந்தது என்பது உண்மை."

பர்மா அரிசி தருவிக்கும் அண்ணா யோசனை

பரிசீலிக்க மத்திய உணவு அமைச்சர் ஒப்புதல்—அமைச்சர் கே. ஏ. மதியழகன் தகவல்

சென்னை, ஜூன் 27—

"கடந்த எப்ரல் திங்களில் புதுடில்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் நமது முதலமைச்சர் அவர்கள், பர்மாவில் இந்திய மக்கள் விட்டுவந்த சொத்துக்களுக்கு ஈடாக பர்மாவிலிருந்து இந்திய அரசு அரிசியாகத் தருவிக்கலாம் என்ற யோசனையைத் தெரிவித்தார்கள். அந்த யோசனையை மத்திய உணவமைச்சரும் பரிசீலிக்க ஒப்புக்கொண்டார்"

என்று, இன்று சட்டமன்றத்தில், உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன, திரு. எஸ். ஜே. இராமசாமி கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

கேள்வி:—"மத்திய அரசு இதனை ஏற்றுக்கொண்டதா?"

விடை:—"இந்தப் பிரச்சினை இரண்டு நாடுகளுக்குமிடையே நடவடிக்கை எடுக்கவேண்டிய சர்வதேசப் பிரச்சினை. தூதுவரகங்கள் மூலம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனை டில்லி அரசுதான் செய்யவேண்டும்; டில்லி அரசு பரிசீலிப்பதாகக் கூறியிருக்கிறது."

மேலும் தொடர்ந்து துணைக் கேள்விகட்கு அமைச்சர் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"தமிழ் அகதிகள் பர்மாவில் விட்டுவந்த சொத்துக்களுக்குப் பல கோடிக்கணக்கில் பணம் வரவேண்டியுள்ளது. அரிசி தருவிக்கும் திட்டத்துடன் இணைத்து நஷ்டஈடு முழுவதையும் பெறும் நீண்டகாலத் திட்டமாகவே நமது முதலமைச்சர் அவர்கள் இந்த யோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள்.

"தமிழ் நாட்டின் 3½ கோடி மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள இந்த அரசு, தமிழ் மக்களின் நலனுக்கும் அவர்களின்

(4-ம் பக்கம் பார்க்க)

நெல் விலையை உயர்த்துவது மாநில அரசின் கையில் இல்லை

மத்திய அரசின் விலை நிர்ணயக் குழுவே செய்ய வேண்டும்

அமைச்சர் கே. ஏ. மதியழகன் தந்த விளக்கம்

சென்னை, ஜுன் 26—
"இந்த ஆண்டில் விவசாயிகளுக்கு நெல் விலையைக் கூட்ட அல்லது மாற்றியமைக்க அரசிற்கு உத்தேசம் ஏதேனும் உள்ளதா ?"

என்று, எஸ். ஜே. இராமசாமியும், எம். வில்லியமும் கேட்டிருந்த கேள்விக்கு இன்று சட்டமன்றத்தில் உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் 'இல்லை' என்று விடையளித்தார்.

இதனையொட்டி எழுந்த துணைக் கேள்விகளும் அமைச்சர் அளித்த விடைகளும் வருமாறு :—

எஸ். ஜே. இராமசாமி :—"நெல் விலையை உயர்த்துமாறு மத்திய அரசு குறிப்பு ஒன்று அனுப்பியதாகக் கூறப்படுகிறது ; அதன்படி விலை உயர்த்தப்படுமா ?"

அமைச்சர் :—"மத்திய அரசிடமிருந்து குறிப்பு ஏதும் வரவில்லை. விவசாயப் பண்டங்களின் விலை நிர்ணயக் கமிஷன் நிர்ணயித்துள்ள விலைக்குமேல் நாம் உயர்த்த முடியாது. எனவேதான், 'விலை' என்ற பேரால் இல்லாமல், 'போனஸ்' என்ற முறையிலும், 'ஊக்குவிப்புப் பணம்' என்ற முறையிலும் மாநில அரசு ஏற்பாடு செய்துள்ளது."

கே :—"இப்பொழுது உள்ள விலை எப்போது நிர்ணயிக்கப்பட்டது ?"

ப :—"1964-ம் ஆண்டிலும், அதன் பிறகு 1966-ம் ஆண்டிலும் நிர்ணயிக்கப்படடது."

கே :—"மத்திய அரசு குவிண்டாலுக்கு ரூ. 4 வீதம் உயர்த்த மத்திய அரசு அறிவித்திருப்பதாகவும், மேற்கு வங்க மாநில அரசு குவிண்டால் 52 ரூபாயாக இருந்ததை 60 ரூபாயாக உயர்த்தியிருப்பதாகவும் கூறப்படுவது இந்த அரசுக்குத் தெரியுமா ?"

ப :—"அந்த மாதிரியான தகவல் எதுவும் இந்த அரசுக்கு அதிகாரபூர்வமாகக் கிடைக்கவில்லை. அப்படியிருந்தாலும், மேற்கு வங்க மாநிலத்து நிலவரம் வேறு —இங்குள்ள நிலவரம் வேறு."

கே :—"உற்பத்திச் செலவைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?"

ப :—"உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும்—விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்க வேண்டும் என்று கூறப்படும் அதே நேரத்தில், ஏழைகளுக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருள் வழங்க வேண்டியிருக்கிறது. இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் மத்தியில் நின்று அனுபவசாத்தியமானதை அரசு செய்யவேண்டியுள்ளது."

ஏ. ஆர். சுப்பையா (முதலியார்):— "விவசாயத்துக்குத் தேவையான பிண்ணாக்கு, சல்பேட் முதலிய உரங்களின் விலை உயர்ந்திருக்கிறது ; இதனால் உற்பத்திச் செலவு அதிகமாகிறது. இதுபற்றிக் குறிப்பிட்டு மத்திய அரசுக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்க இந்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?"

அமைச்சர் :— "ஏற்கனவே கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாணய மதிப்புக் குறைப்பினால் இரசாயன உரங்களின் விலை அதிகரித்துவிட்டது. இந்த விலை ஏற்றத்தைக் கொஞ்சமும் விரும்பாத இந்த அரசு, கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. இன்னும் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்க உறுப்பினர் தகுந்த யோசனை தெரிவித்தால் அரசு அதனை ஏற்று அதன்படி செய்யும்."

எம். சண்முகம் :—"விலை நிர்ணயம் செய்யும்போது மத்திய அரசு இந்த மாநில அரசையும் கலந்தாலோசிக்கிறதா அல்லது எதேச்சாதிகாரமாக நடந்து கொள்கிறதா ?"

அமைச்சர் :—"மாநில அரசையும் கலந்துதான் ஆலோசிக்கிறது ; ஆனால் முடிவு எடுக்கும் அதிகாரம் மத்திய அரசையே சேர்ந்ததாகும்."

மேலும் அமைச்சர் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கொள்முதல் விலையை நிர்ணயிப்பது மத்திய அரசுதான் என்பதையும், மாநில அரசு விலை உயர்த்த நினைத்தாலும் முடியாது என்பதையும் தெளிவாக எடுத்துச் சொன்னார்.

அவசர நிலை நீடிக்க அவசியம்என்ன?

அரசின் ஆற்றலற்ற தன்மையே வெளிப்படுகிறது

க.அன்பழகன்—செ,கந்தப்பன் கண்டனம்

புதுடில்லி, ஜுன், 22—
'அவசர நிலை' தொடர்ந்து நீடிக்கும் என்று உள்துறையமைச்சர் அறிவித்ததையடுத்து மக்களவையில் எதிர்க் கட்சித் தலைவர்கள் மிகுந்த பரபரப்புக் காட்டினர்!

சிறிது நாட்களுக்கு முன்புதான் உள்துறையமைச்சர் சவாண் எதிர்க் கட்சித் தலைவர்களைக் கூட்டி சில குறிப்பிட்ட பகுதிகளைத் தவிர நாட்டின் மற்ற இடங்களில் 'அவசர நிலை'யை நீக்கிவிட அரசுக்கு வசதியாக அரசியல் சட்டத் திருத்தம் ஒன்று கொண்டு வருவது பற்றி ஆலோசித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர்கள் இந்த ஏற்பாட்டுக்கு உடன்படாததால் முடிவு எதுவும் செய்யப்படவில்லை.

'உள்துறையமைச்சரின் இந்த அறிவிப்பு, 'கடும் அதிர்ச்சி தரத்தக்கது'—'இகழ்ச்சிக்குரியது'—'அடாத செயல்'—என்றெல்லாம் எதிர்க் கட்சித் தலைவர்கள் வர்ணித்தனர்.

தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் இது பற்றிக் கருத்தறிவிக்கையில் குறிப்பிட்டதாவது :—

"அவசரநிலை மேலும் நீடிப்பது ஆற்றலற்ற தன்மையையே காட்டுகிறது ; அவசரநிலை நீடிக்கவேண்டிய சூழ்நிலை தற்போது இல்லை."

தி. மு. க. உறுப்பினர் செ. கந்தப்பன் பேசுகையில் கோரியதாவது :—

"அவசர நிலைச் சட்டம், தொழிலாளர்கட்கு எதிராகப் பயன்படுத்தப்பட மாட்டாது என உறுதியளிக்கப்பட வேண்டும்."

காலமடி காலம்!

"கஷ்டப்பட்டு வேலை செய்பவர்களுக்கு மதிப்பில்லை! முகஸ்துதி செய்துகொண்டு, 'காக்கை' பிடிப்பவர்களுக்குத் தான் காலம் இது !

"கட்சித் தலைமையினிடம் உறுதி இல்லை !"

—[அனைத்திந்திய காங்கிரசுக் கமிட்டிக் கூட்டத்தில் பலத்த கையொலிக்கிடையே சீதா தேவி என்ற உறுப்பினர் பேசியது.]

உள்ளும் புறமும்

அவசியம் இல்லை--- 'அவசரம்' இருக்கிறது!

ஒவ்வொரு தடவையும் மத்திய அரசு கொண்டுவரும் அரசியல் சட்டத் திருத்தத்தைப் பற்றி வேடிக்கையாக ஒரு கருத்தைச் சொல்லுவார்கள் :—

"அரசியல் சட்டத்தின் உண்மை நகல் இப்போது இல்லை ; திருத்தங்கள் தான் இருக்கின்றன"
என்பதுதான் அது !

1962 ம் ஆண்டு அமுலாக்கப்பட்ட அவசரநிலைப் பிரகடனத்தைப் பற்றியும் இனி வருங் காலத்தில் இப்படித்தான் குறிப்பிட வேண்டும்போல் இருக்கிறது—

அவசிய நிலையைக் காணோம்—அவசர நிலை இருக்கிறது''
என்று !

சனநாயகக் கோட்பாடுகளுக்கு எதிரான அவசர நிலைப் பிரகடனம் தொடர்ந்து ஐந்தாண்டுகள் — தேவையில்லாதபோதும்—நீடித்து வந்திருப்பது, மக்களாட்சியுள்ள நாடுகளில் இந்தியாவை மட்டும்தான் அதற்கு உதாரணமாகக் கூற முடியும்.

ஜுலை முதல் தேதி முதல் சில பல இடங்களைத் தவிர ஏனைய பகுதிகளில் எடுக்கப்படலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்த அவசர நிலை, இப்போது, 'காலவரையின்றி நீட்டிக்கப்படும்' என்று சவாண் அறிவித்திருக்கிறார்.

அந்நிய ஆக்கிரமிப்பின்போது—உள்நாட்டில் ஆட்சிக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் உருவாகும்போது அமுலாக்க வேண்டிய அவசர நிலை, 1963-ம் ஆண்டிலிருந்து தேவையில்லாமலேயே நீட்டிக்கப்பட்டு வந்திருகிறது.

'வாக்கெடுப்பு' என்னும் அடிப்படை சனநாயக முறையின் மூலம் இந்தியாவின் ஏழு மாநிலங்களில் சுமூகமான முறையில் எதிர்க் கட்சிகளின் ஆட்சியும், மற்றைய மாநிலங்களிலும் மத்திய அரசிலும் காங்கிரசு நிர்வாகம் அமைதியாகவும் நடைபெற்றுக் கொண்டுவரும்போது, உள்நாட்டு நிலை எதனையும் காட்டி அவசர நிலையை நீடிக்கச் செய்ய முடியாத மத்திய அரசினர், நாகர்கள் கலவரம்—மீசோக்கள் புரட்சி — சீனா-பாகிஸ்தான் கூட்டு காஷ்மீரில் குழப்பம்—என்ற காரணங்களைக் காட்டி சமாதானம் கூறியிருக்கின்றனர் !

மேற்கண்ட நான்கில் எந்த ஒன்றும், இன்று—நேற்று தோன்றியதல்ல ; சுதந்திர இந்தியா வந்தது முதலே நிரந்தரமாக இருந்திருக்கின்றன !

ஏற்கனவே நிகழ்ந்திருக்கும் ஆக்கிரமிப்புக்கள்தாம் தொடர்ந்து இருந்துவருகின்றன ! புதிய ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை !

அப்படி ஏதேனும் நிகழ்ந்தால், அந்த நேரத்தில் நாடே ஒன்று திரளும் என்பதனை எல்லா அரசியல் கட்சிகளும்; 1962ம் ஆண்டிலேயே இயற்கையாக எழுந்த ஒருமித்த உணர்ச்சியின் மூலம் நிரூபித்திருக்கின்றன !

"மிசோ புரட்சியையோ, நாகர் கலவரங்களையோ அடக்க ஏற்கனவே இருக்கும் அதிகாரங்களே போதும்'' என்பதனை, அரசியல் புரிந்தவர்கள் தெரிந்திருக்கும் உண்மையாகும்.

நோய்வாய்ப்பட்டிருந்தபோது, உடல் வலியை மறப்பதற்காக மருத்துவர் கொடுத்த மதுவை, குணமடைந்த பின்னரும் அதனைப் பழக்கமாக மாற்றிக்கொள்ள முயன்ற மனிதனைப்போல், அவசர நிலை காரணமாக மக்கள் ஒப்புதலுடன் ஏற்றுக்கொண்ட அதி

(3 ம் பக்கம் பார்க்க)

மாநில அரசுகள் தத்தளிப்பதேன்?

மாநில அரசுகள் தத்தளிப்பதேன் ?

அரசியல் சட்டத்தின் ஏழாவது அட்டவணையிலுள்ள மத்தியப் பட்டியலில் 36 முதல் 38 வரை உள்ள விதிமுறைகள், பணம் வெளியிடுதல், அந்நியச் செலாவணி போன்ற துறைகளை மத்திய அரசுடையது ஆக்கிவைத்திருப்பதன் மூலம், பணவீக்கம்—பற்றுக்குறை—நிதி நிலை என்பவைகளுக்கு மத்திய அரசு முழுப் பொறுப்பேற்றிருக்கச் செய்கிறது ; இதனால், விலை ஏற்றம் ஏற்படுவதற்கான பொறுப்பும் மத்திய அரசினையே சாருகிறது ! எனவே, விலை கட்டுப்படுத்தப்படுவதற்கான பொறுப்பையும் மத்திய அரசே மேற்கொண்டாக வேண்டியதாகிறது.

மத்திய அரசின் நடவடிக்கையால் விலைகள் கட்டுக்கடங்காமல் ஏறிவிடுவதன் விளைவாக ஏற்படும் இன்னலையும் இழப்பையும் மாநில அரசு தாங்கித் தத்தளிக்க வேண்டிவருகிறது !

விலைகளைக் குறைத்து நிலைமையைச் சரிப்படுத்தும் வலிமையை இந்திய அரசியல் சட்டம் மாநில அரசுகளுக்கு அளித்திடவில்லை !

எனவேதான், விலையேற்றம் காரணமாக அரசு அலுவலர்க்கு ஊதிய உயர்வு தருவதால் ஏற்படும் அதிகச் செலவு—உணவுப் பண்ட விலை ஏற்றத்தால் தாக்கப்படும் மக்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருள் வழங்குவதால் ஏற்படும் இழப்பு—ஆகியவற்றில், மத்திய அரசு பங்கு ஏற்க வேண்டும் என்று நான் கேட்கவேண்டிய நிலை ஏற்பட்டது !

அந்தந்த மாநிலங்கள், தத்தமது மக்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருள் தருவதால் ஏற்படும் பளுவையும், அரசு ஊழியரின் ஊதியத்தை உயர்த்துவதால் ஏற்படும் சுமையையும், தாமேதான் தாங்கிக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு கூறுவது கேட்டு, நான் வருந்துவதன் காரணத்தை விளக்கவே இதனைக் கூறினேன்.

இந்தப் பிரச்சினையில், மாநில—மத்திய சர்க்கார் தொடர்பு அமைந்துள்ள விதத்தை உணருபவர்கள், என் வாதத்தை ஏற்க மறுக்கமாட்டார்கள் —கட்சிக் கண்ணோட்டம் குறுக்கிட்டாலன்றி !

மாநிலங்களின் நலிவு நீங்கிட வழி ஏது ?

மத்திய—மாநில அரசுகளிடையே உள்ள பொருளாதாரத் தொடர்புகளின் தன்மையை அறிந்து நேர்செய்யவும், சீர்செய்யவும், ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நிதிக் குழு அமைக்கப்படுகிறது ; அதன் மூலம் மாநில அரசுகளின் வருவாய்ப் பங்குத் தொகை படிப்படியாக உயர்த்தப்படுகிறது என்றாலும், இந்தக் குழுவின் பிடிக்கு அப்பாற்பட்டதாக திட்ட நிதி இருந்துவருவதால், மாநிலங்களின் நலிவு நிலைமை போக்கிட அந்தக் குழுவினால் முழுவதும் முடிவதில்லை.

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையே நிதிக் குழு அமைவதால், இடைக் காலத்தில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைந்துகொள்ளும் வலிவற்ற நிலையில் மாநில அரசுகள் இன்னலடைகின்றன !

ஆய்வுக் குழு அமைவது அவசியம்

எனவே நிதிக் குழு நிரந்தரமான அமைப்பு ஆக்கப்பட வேண்டும் என்பதையும், அக்குழு ஆண்டுக்கு ஆண்டு மத்திய—மாநில அரசுகளுக்கிடையேயுள்ள பொருளாதாரத் தொடர்பு குறித்து ஆய்ந்து பார்த்து ஆவன செய்திட வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்திய அரசியல் சட்ட அடிப்படையில் நடத்தப்பட்டுவரும் அரசு மூலம் பெறப்பட்டுள்ள அனுபவங்களைக் கண்டறிந்து-மாநில அரசுகளின் வளர்ச்சிக்கு உகந்தான முறையில் என்ன மாற்றங்கள் செய்யலாம் என்பது பற்றி கருத்தறிவிக்க ஓர் 'ஆய்வுக் குழு' அமைக்கப்பட வேண்டுமென்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இத்தகைய ஒரு குழு அமைத்திட, அரசியல் சட்டத்தின் 263-ம் பிரிவு இடமளிக்கிறது என்றும் நம்புகிறேன்.

செம்மையான முறையில் செய்திட இயலுமா ?

மாநிலங்களுக்கு வளமான வருவாய்த் துறை கிடைப்பது—ஓர் ஒப்புக்கொள்ளப்பட்ட முறையின் அடிப்படையில் திட்ட நிதியை ஒதுக்கிக் கொடுத்து, அதனைச் செலவிடும் வகை பற்றிய உரிமையை மாநிலங்களுக்கு அளிப்பது ஆகியவை மூலம் மாநிலங்களின் பொருளாதார வலிவு செம்மைப் படுத்தப்பட்டாலொழிய, பெருகிவரும் மக்களின் தேவைகளை நிறைவேற்றி அவர்களுக்குப் புது வாழ்வு தேடித்தரும் பொறுப்பினை மாநில அரசுகள் செம்மையான முறையிலே செய்திட இயலாது என்பதை இன்று பல மாநில அரசுத் தலைவர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.

அவர்களும் என்னைப் போலவே, 'மத்திய—மாநில அரசுகளுக்கிடையே உள்ள தொடர்புகள் பற்றிய மறு சிந்தனை தேவை' என்று கூறுகின்றனர் என்பதனை இப்பேரவை அறியும்.

உள்ள உறவு, உள்ளத்துக்கு நிறைவு தருவதாக அமையவேண்டும் என்ற நோக்கத்தை அனைவரும் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இதுவரை வரிப் பங்கீடு—அதிகார வரம்பு—திட்ட நிதி ஒதுக்கீடு ஆகியவற்றிலேயே கிடைத்துள்ள அனுபவம், கசப்பு நிரம்பியதாக இருப்பதை எவரும் மறுத்திட இயலாது !

இந்தக் கசப்பு நீங்கிடவும், கனிவு கிடைத்திடவுமான முறையில் தொடர்புகள் அமைந்திட வழி காண்பது உடனடிப் பிரச்சினையாகிவிட்டிருக்கிறது ! இது குறித்து அச்சமோ ஐயப்பாடோ அல்ல—தெளிவான சிந்தனையே தேவை !

ஒருவருக்கொருவர் உள்ள நல்லெண்ணத்தினாலும், ஒருவரையொருவர் நன்கறிவதாலும் தோழமைத் தொடர்பு மகிழ்ச்சியும் பயனும் மிக்கதாக ஆக்கப்படவேண்டும் என்பதே எனது அவாவாகும்.

—முதலமைச்சர் அண்ணா
(நிதி நிலை அறிக்கையில்)

சாதிகள் நிலைத்திருக்க இலாபவேட்டையே காரணம்

சட்டமன்றத்தில் அண்ணு தந்த விளக்கம்

சென்னை, ஜுன் 24—

"சிறுபான்மை இன மக்களை உத்தியோகத்தில் நியமிப்பதில் ஏதாவது கட்டுப்பாடு உண்டா? எங்கெந்த விஷயங்களில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது?"

என்று சட்டமன்றத்தில் வி. கே. கோதண்டராமன் (இடது கம்யூ.) கேட்ட கேள்விக்கு முதலமைச்சர் அண்ணு பின்வருமாறு விடையளித்தார்:—

"சிறுபான்மையினர் எந்த விதத்திலும் வேறுபடுத்தும் நிலை இல்லை; என்ருலும், தாழ்த்தப்பட்ட ஆதித்திராவிடர்கள், பின் தங்கியவர்கள் எனப்படுவோருக்குக் குறிப்பிட்ட அளவுக்குப் பதவிகளை ஒதுக்கியுள்ளது. தமிழ் அறியாத மொழிச் சிறுபான்மையினரை நியமிக்கும் போதும் தடை எதுவுமில்லை; ஆனல், நியமனமாகி நான்கு ஆண்டுகள் கழித்துத் தமிழில் இரண்டாம் வகுப்பு எனப்படும் தேர்வு எழுதவேண்டும்."

கேள்வி:—"உத்தியோகத்தில் பெண்கட்கு வாய்ப்பு உண்டா?"

விடை;—"இப்போது பெண்களுக்குரிய இடம், சிறப்பிடமே யாகும்."

கே:—"மனுச் செய்துகொள்ளும்போது சாதி மதங்களைக் குறிப்பிட்டாமல் இருக்கச் செய்யப்படுமா?"

வி:—"மனுச்செய்துகொள்பவர்களுக்கு அத்தகையசங்கடத்தை அரசு கொடுப்பதில்லை; அவர்களாகவே அதை ஏற்றுக்கொள்கின்றனர்."

கே:—"சலவையாளர்களையும் தாழ்த்தப்பட்ட பட்டியலில் சேர்க்கப்படுமா?"

வி:—"சலவையாளர்களையும் சேர்க்கவேண்டும் என்ற கோரிக்கை உரிய நேரத்தில் உரிய இடத்தில் அனுப்பிவைக்கப்படும்."

கே:—ஆதித் திராவிடக் கிருஸ்தவர்களாக மதம் மாறினல் அவர்களுக்கும் சிறுபான்மையர்க்குரிய சலுகை வழங்கப்படுமா?"

வி:—"இதுவும் பரிசீலிக்கப்படும்."

கே:—"தமிழ்நாட்டில் இருக்கும் எல்லோரையும் ஒரே இனமாக மாற்ற முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமா?"

வி:—"சாதிப் பெயரைச் சொன்னல் இலாபம் கிடைக்கும் என்கிற நிலை இருக்கும் வரை சாதியும் ஒழியாது. இலாபமற்ற நோக்கத்தோடு யாரும் சாதிப் பட்டத்தை வைத்துக்கொண்டிருக்கமாட்டார்கள். இப்போதே படிப்படியாக சாதிப் பிடிப்புத் தகர்ந்து வருகிறது. சர்க்கார் தரப்பிலிருந்து சாதியை ஒழிக்க நடவடிக்கை எடுக்கமுடியாது; பொதுமக்களிடையே பிடிப்புள்ளவர்கள்தான் சாதியை நீக்க வழி காண வேண்டும்."

கே:—"பெயருக்குப் பின்னல் இருக்கும் சாதிப் பட்டத்தை நீக்க சர்க்கார் முயலுமா?"

வி:—"சாதிப்பட்டத்தை விட்டு விட்டவர்கள்கூட, ஜுன்—ஜூலை மாதங்களில் அதை மறவாமல் சொல்லுகிருர்களே!"

கல்லறை வாசகம்

"முடிவில்லா அமைதியில் ஆழ்ந்திருக்கும் இந்த மனிதரின் மகள் உட்பட எல்லாத் தொண்டர்களும், இவரது அறிவுரைகளை மதித்துப் பின்பற்றுவதில்லை"

என்ற வரிகளை, உருவாக்க இருக்கும் நேரு நினைவுச் சின்னத்தின்மீது பொறிக்கலாம்—என்ற யோசனையை மாநிலங்களவையில், கம்யூனிஸ்டு உறுப்பினர் பூபேஷ் குப்தா வழங்கியிருக்கிருர்.

"உறுப்பினர் கூறியது அனைத்தும் பொய்" என்று கூறி, பூபேஷ் குப்தாவின் யோசனையை கல்வி அமைச்சர் மறுத்திருக்கிருர்!

சேலம்-தூத்துக்குடி எழுச்சி நாள்

வலதுசாரிகம்யூனிஸ்டு ஆதரவு

திருச்சி, ஜுன் 24—

"சேலம் உருக்காலை, தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் ஆகியவற்றை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும்" என்று கோரி தி. மு. கழகம் நடத்தவிருக்கும், சேலம்—தூத்துக்குடி எழுச்சி நாளுக்கு வலது பொதுவுடமைக் கட்சி ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

உருக்காலைக்கு உரிமைப் போர்:

'தேசீய'த்துக்கு இழுக்கு அல்ல-- ஒருமைப்பாட்டுக்குத் தடையாகாது!

"சேலம் உருக்காலை விவகாரத்தில் தமிழகத்துக்கு அநீதி விளைவிக்கப்பட்டுவிட்டது என்றே சொல்ல வேண்டும். இத்திட்டம் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு அதற்கென—ரூ. 47 இலட்சம் என்று நினைக்கிறேன்—நிதியும் ஒதுக்கப்பட்டது. அந்தத் திட்டம், மத்திய அரசில் ஒரு மந்திரி மாறியதாலேயே கைவிடப்பட்டுவிட்டது என்ருல், 'தேசீயம்' என்பது எந்தப் போர்வையைப் போர்த்திக்கொண்டு செயல்படுகிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்!

"ஆந்திரத்தைச் சேர்ந்த ஒருவர் மந்திரியானதால் நமது திட்டம் மாற்றப்பட்டது என்ருல், நமது உரிமைக்குக் களங்கம் மட்டுமல்ல—தன்மானத்துக்கே ஒரு தாக்குதல் ஆகும்!

"இது தொடர்பாக நானும், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த என். மகாலிங்கமும், மற்றும் தி.மு.க.—கம்யூனிஸ்டு உள்ளிட்ட அனைத்துக் கட்சியினரும் ஒரு தூதுக் குழுவாக டில்லிக்குச் சென்று, தலைமையமைச்சரைக் கண்டு மனுக் கொடுத்தோம்; அப்போது, 'பொகாரோ இரும்பாலைக்குச் செலவிடும் பணத்தைக் கொண்டு, தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—பீகார் ஆகிய நான்கு மாநிலங்களிலும் சிறிய அளவில் நான்கு உருக்காலைகளை நிறுவலாம்' என்று யோசனை கூறினேம்; அந்த யோசனையை, தலைமைச்சர் இந்திரா காந்தி 'தவறு' என்று சொல்லவில்லை; அதே நேரத்தில், அதனை ஏற்றுக் கொள்ளவும் இல்லை; காரணம், 'பீகார் மாநிலத்திற்கு ஒதுக்கிவிட்ட பொகாரோ திட்டத்தைப் பிரித்துக் கொடுத்தால், அந்த மாநிலம் எப்படித் தாக்குமோ' என்ற அச்சந்தான்! நாம் அப்படித் தாக்காததால்தான் இப்போது தண்டனையை அனுபவிக்கிறோம்! தாக்கப்பட்ட இனத்தின் தற்காப்புக்காகத்தான் நான் பேசுகிறேன்.

"நான் சற்று உணர்ச்சிவயப்படக்கூடியவன்; நமது முதலமைச்சர் உணர்ச்சிவயப்பட்டு நான் பார்த்ததே இல்லை. அவரே உணர்ச்சிவயப்பட்டு, 'பதவித துறப்பு' உள்ளிட்ட கிளர்ச்சியைத் துவக்குவதாகக் கூறியதிலிருந்து, 'இது எவ்வளவு நியாயமான கோரிக்கை' என்பதைக் காட்டுகிறது!

"மத்திய அரசை எதிர்த்து மாநில அரசு போராட்டம் நடத்துவது என்பது, இந்த மாநிலத்தில் நடந்திராத ஒன்று; ஆனல் வேறு மாநிலங்களில் நடந்திருக்கின்றன! அசாம் மாநிலத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கோரி அந்த மாநில முதலமைச்சர் இராஜிநாமா செய்வதாக அறிவித்ததும், மத்திய அரசு பணிந்த நிகழ்ச்சி நினைவுகூரத்தக்கது. இந்த மாநிலத்தில் இராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது, சென்னையை ஆந்திரத்தின் தற்காலிகத் தலைநகராக ஆக்கினல் இராஜிநாமா செய்வதாக அறிவித்தது நினைவிருக்கலாம்.

"எனவே, சேலம் தொழிற்சாலைக்காகப் போராடுவது, தேசீயத்துக்கு இழுக்கு அல்ல—ஒருமைப்பாட்டுக்குத் தடையுமாகாது!"

--ம. பொ. சிவஞானம்

(சட்டமன்றத்தில்)

காங்கிரசு ஆட்சியில் தப்பியவர்கள் கூட்டணி ஆட்சியில் சிக்குகின்றனர்

கல்கத்தா, ஜுன் 26—

சமூக எதிரிகள் என்று கருதப்படும் ஆலை உரிமையாளர்கள்—உழவர்கள் — வணிகர்கள்—மற்றும் சிலர்—மொத்தம் 20 பேர், தடுப்புக் காவல் சட்டத்தின்படி மேற்கு வங்கத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்கு வங்கத்தில் எதிர்க் கட்சிகளின் கூட்டணி அரசு நடைபெறுகிறது என்பதும், இதுவரை காங்கிரசு ஆட்கியில் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்களைக் கைது செய்யவே பாதுகாப்புச் சட்டத்தை அரசினர் பயன்படுத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மக்களுக்கு உணவுப் பொருள் போன்ற பொருட்கள் வழங்கும் வேலை ஒழுங்காக நடைபெறுவதற்குக் கேடு விளைவிப்பவர்களைக் கைது செய்து காவலில் வைக்குமாறு மாவட்ட மாஜிஸ்திரேட்டுகளுக்கு மேற்கு வங்க அரசு ஆணையிட்டுள்ளது.

300 'கேரோ'க்கள்!

"மேற்கு வங்கத்தில் இதுவரை ஏறத்தாழ 300 'கேரோ'க்கள் நடந்துள்ளன; நீதிமன்றத் தீர்ப்புக்கள் செயல்படுத்தப்படாமல் இருப்பது—தொழில் தகராறுகள் தீர்க்கப்படாமல் நீண்ட காலமாக நீடித்து வருவது தொடர்பாக இந்தக் 'கேரோ'க்கள் நடைபெற்றன" என்று தொழிலாளர் அமைச்சர் சுபோத் முகர்ஜி தெரிவித்தார்.

'கேரோ' முறையை ஆதரிக்கவோ கண்டிக்கவோ இல்லை என்றும் அமைச்சர் சுபோத் முகர்ஜி கூறினர்.

கூட்டுறவுத் துறை ஊழல்களை ஒழிக்க நடவடிக்கை

நடைமுறைகளை ஆராயக் குழு அமைக்கிறது அரசு

'கடுமையான விதிகளை இணைத்துச் சட்டம் திருத்தப்படும்'--- சட்டமன்றத்தில் அமைச்சர் மாதவன் விளக்கம்

சென்னை, ஜுன் 26—

மாநிலக் கூட்டுறவுத் துறையைச் சீரமைத்துப் புத்துயிர் அளிப்பதுடன், அதன் நிதிகள் தவருக நிர்வகிக்கப்படுவதையும் தடுக்கும் நோக்கத்துடன் அது செயல்படும் முறையை ஆராய்ந்து அறியுமாறு வல்லுநர் குழு ஒன்றை நியமிக்கவிருப்பதாகக் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சே. மாதவன், இன்று சட்டமன்றக் கேள்வி நேரத்தில் பதிலளித்தார்.

அவர் மேலும் பல துணைக்கேள்விகட்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"கூட்டுறவுச் சட்ட விதிமுறைகளையும், அவற்றைச் செயல்படுத்தும் விதத்தையும் ஆராய்ந்து தவறுகளை நீக்குவது பற்றி ஆராயப்படும்.

குழுவில் யார் யாரை நியமிப்பது என்பது இன்னும் முடிவாகவில்லை.

தொடர்ந்து பதவி வகிப்பதும், ஒரே நபர் பல அமைப்புகளில் தலைவராகப் பதவி வகிப்பதும் தவறுகள் நடைபெறவும், ஒருவரே தொடர்ந்து பல தவறுகளில் ஈடுபடவும் வாய்ப்பாக இருக்கிறது.

இப்படி வந்துள்ள பல புகார்களில் முடிவெடுக்க முடியாமல் இருந்து வருவதற்கு சட்டத்தில் உள்ள குறைபாடுதான் காரணம்.

கூட்டுறவுத் துறையில் எந்தக் கட்சியினர் தவறு செய்தாலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மூன்ருண்டுக்கு ஒருமுறை தலைவர் தேர்தல் நடைபெற வேண்டும் என்றிருந்தது, 'ஆண்டுக்கு மூன்றில் ஒரு பங்கினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்' என்ற மாற்றப்பட்டதால் ஏற்பட்டுள்ள சிக்கலையும் கவனத்தில் கொண்டே சட்டம் திருத்தப்படும்.

குற்றவாளிகள் என்று ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ள அனைவரும் நிச்சயம் தண்டிக்கப்படுவர்.

அரிசன மக்களுக்குக் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் ஊக்கமளிக்க இந்த அரசு ஆர்வம் கொண்டுள்ளது.

தவறுகள் செய்யவும், தப்பிக்கவும் சட்டத்தில் இடம் இருக்கிறது; எனவே சட்ட விதிகளைக் கடுமையாக்கிச் சட்டம் திருத்தப்படும்.

குற்றவாளிகளைத் தண்டிக்க இ. பி. கோ. சட்டம் இருக்கிறது. கூட்டுறவுத்துறைக் குற்றவாளிகளைக் கூட்டுறவுச் சட்டப்படி தண்டிக்க வேண்டியுள்ளது.

இந்த இரண்டு சட்டங்களையும் இணைத்துத் துரிதமாக நடவடிக்கை எடுக்க வழிசெய்யப்படும்."

அவசியம் இல்லை---

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கார முறைகளை, ஒரு நிரந்தர நிர்வாக வசதியாக மாற்றிக் கொள்ள முன்வந்திருக்கிறது மத்திய அரசு!

பாதுகாப்புச் சட்டத்தைத் தவருகப் பயன்படுத்தியமைக்காகச் சில அதிகாரிகள்—அவசர நிலை எடுக்கப்பட்டால்—வழக்கு மன்றங்களுக்குச் செல்ல நேரிடும்—

'காஷ்மீரத்துப் புலி' என்று கருதப்படுபவரும் காவலிலிருப்பவருமான ஷேக் அப்துல்லா, அவசர நிலை போகுமானல், மீண்டும் போர்க் கோலம் பூணக்கூடும்—

என்ற இரண்டு காரணங்களுக்காகவும் புதுடில்லி, அவசர நிலையை ரத்து செய்ய அச்சம் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

'அவசர நிலை' என்பது, அன்ருட நிர்வாக முறைகளுக்கு அப்பாற்பட்டது! மக்களின் உளமார்ந்த ஒப்புதலை முக்கிய நேரத்தில் மட்டுமே பெறுவதற்காக உள்ள ஒரு வசதி!

ஆட்டுக்காரச் சிறுவன் கதையிலாவது, அவன்—சோதித்துப் பார்ப்பதற்காக மட்டுமே—'புலி வருகிறது, புலி வருகிறது' என்று அறைகூவல் விட்டு, 'உதவி வருகிறதா' என்று வேடிக்கை பார்த்ததாகக் கூறப்படுகிறது!

ஆனல் மத்திய அரசு, நவீன ஆட்டுக்காரச் சிறுவனுக மாறியிருக்கிறது. புலி வந்ததோ இல்லையோ—'உதவி' மட்டும், எப்போதும் அருகில் இருக்க வேண்டுமென்று நினைக்கிறது!

இது, 'புலியை விரட்டும் துணிச்சல் இல்லை' என்பதை மட்டும் நிருபிப்பதாக இல்லை—'ஆடு மேய்க்கும் அனுபவமும் பக்குவமும் அறவே கிடையாது' என்பதனையும் வெளிப்படுவதாக இருக்கிறது!

—எஸ். ஆர்.

செய்திக்கு மறுப்பு

சென்னை, ஜுன் 24—

சென்னை மாநகராட்சி மன்றத்தின் முன் சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் செயலாளர் ஒருவர் உண்ணு நோன்பு இருப்பதாக நாளேடு ஒன்றில் வெளிவந்த செய்தி, உண்மைக்குப் புறம்பானதாகும் எனத் தெரிகிறது.

இது தொடர்பாக, தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுச் செயலாளர் சி. ஆர். கோலப்பன் தெரிவிப்பதாவது:—

"சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர், ஆணையர், மற்றும் அலுவலர்கள் சலவைத் தொழிலாளர் விவகாரங்களில் நல்ல அக்கறை செலுத்துகிருர்கள்; சலவைத் துறைகளை அடிக்கடி பார்வையிட்டு கோரிக்கைகளை நிறைவு செய்கிருர்கள்.

"நாளேடு ஒன்றில், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் ஏ. குருசாமி என்பவர் மாநகராட்சி மன்றத்தின்முன் உண்ணு நோன்பு இருக்கப்போவதாகச் செய்தி வெளியாகியிருந்தது; அந்தச் செய்தி உண்மைக்குப் புறம்பானதாகும். சங்கத்தின் செயலாளராக அந்தப் பெயருடன் யாரும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்."

முகவரி

எஸ். பி. சற்குணம்,
1, லாயர் சின்னத்தம்பி தெரு,
வண்ணுரப்பேட்டை,
சென்னை-21.

தொலைபேசி எண்: 52617

சட்டமன்றத்தில்...!

[போகாத நிருபர்]

அண்ணாவின் குறுக்கீட்டால் திங்கட்கிழமையன்று மேலவையில் நடந்துள்ள ஒரு சுவையான சம்பவம், பல நாளிதழ்களின் கவனத்துக்கு வராமல் போயிருப்பது வியப்பாக இருக்கிறது.

'இந்து' இதழில் வெளியாகியிருக்கும் அந்த நிகழ்ச்சி, 'விளையாட்டு உதாரண'த்திலும் முன்னாள் அமைச்சர் வெங்கட்ராமன் எப்படித் தோற்றுப் போயிருக்கிறார் என்பதைத் தெளிவுபடுத்துவதாக இருக்கிறது.

பஸ் தேசியமயம்பற்றித் தன் மனதுக்குச் சரி என்று தோன்றிய அமெரிக்க நடைமுறை ஒன்றினை எடுத்துக்காட்டியிருப்பதுடன் அவர் நின்றிருக்கலாம். 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' என்பார்கள். 'பஸ்காரர்களிடமிருந்து காங்கிரசு மட்டும்தான் நிதி உதவிகள் பெற்றிருக்கிறது என்று சொல்லவேண்டாம்; அரசியல் கட்சிகளுக்குள் கல்லெறிந்து விளையாடிக் கொள்வானேன்?' என்று கூறி, களங்கத்தைப் பங்குபோட முனைந்திருக்கிறார்.

"எந்தப் பஸ் அதிபரிடமிருந்தாவது தி. மு. கழகம் நிதி வாங்கியது என்பதனை, உறுப்பினர் எடுத்துக்கூற முடியுமா?" என்று இடைமறித்துக் கேட்ட முதலமைச்சர் அண்ணாவின் வினாவுக்கு 'முடியும்; ஆனால் விரும்பவில்லை' என்று கூறியதுடன் நிற்காமல், 'எப்போதும் சர்ச்சைகளில் ஈடுபட்டுப் பழகியவனல்ல நான்' என்று வழுக்கிக் கொண்டு சென்றிருக்கிறார்!

"நீங்கள் சர்ச்சைகளில் ஈடுபடாதவராக இருக்கலாம்; ஆனால் சர்ச்சைகளை உண்டாக்கிவிடுபவராக இருக்கிறீர்கள்" என்று முதலமைச்சரின் பதில், வெங்கட்ராமனை மேலும் உறுத்தியிருக்க வேண்டும்.

"பந்து என்னுடைய மைதானத்தில் கிடப்பதற்கு அனுமதிக்க மாட்டேன்; திரும்பவும் எதிர்ப்புறம் அனுப்புவதற்குத்தான் பார்ப்பேன்" என்று விளையாட்டுத் துறையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு ஆங்கில உதாரணத்தின் உதவியை நாடியிருக்கிறார் வெங்கட்ராமன்!

காங்கிரசு மைதானத்தில் கிடக்கும் பந்து எதிர் ஆட்டக்காரர்களால் 'கோல்' போடப்பட்ட பந்தாகும். தடுத்து நிறுத்தாததனால், கீழே விழ்ந்த பந்தை, பின்னர் எதிர்ப்புறம் அனுப்புவதாலேயே, இழந்த 'பாயிண்ட்' திரும்பவும் கிடைத்துவிடாது!

"பஸ் அதிபர்களிடமிருந்து கிடைக்கும் பணத்தைக்கொண்டு காங்கிரசு தேர்தல் செலவுகளைச் செய்கிறது" என்ற குற்றச்சாட்டு, மற்றையக் கட்சிகள், காங்கிரசு மைதானத்தில் போட்ட 'கோல்' பந்தைத் தடுத்து நிறுத்தவும் திறமையில்லாமல், கீழே விழ்ந்த பின்னர் அதை வைத்துக்கொண்டு வீரம் பேசுவதால், எதிர்த்தரப்பினர் எடுத்த 'பாயிண்ட்' குறைந்துவிடாது! புதிய 'பாயிண்ட்' எடுக்க அது பயன்படுமே தவிர, போடப்பட்ட 'கோல்' இல்லையென்று ஆகிவிட்டது!

வெங்கட்ராமனின் விளையாட்டு உதாரணமும் அவருக்கு வெற்றியளிக்கவில்லை!

முறையாகப் பெறாத குழந்தையை—குற்றச்சாட்டுக்குப் பயந்து கொண்டு—'இது என்னிடம் இருக்க அனுமதிக்கமாட்டேன்' என்று மாற்றார் கைகளில் கொடுத்துவிடுவதால் களங்கம் போய்விடுவதில்லை.

'சீரணி' என்று சொல்வதிலேயே P osperity Brigades என்ற பெயரின் தமிழாக்கம் முழுமை பெற்றுவிடுகிறது!

சீரணியை, 'சீரணிப் படை' என்ற பெயரில் அழைக்கும் தவறுக்கு, வெங்கட்ராமனும் ஆளாகியிருக்கிறார்!

இந்தத் தவறுக்கு அதிகாரபூர்வமாகக்கூட ஒரு திருத்தம் வெளியிடுவது நல்லது; ஏனெனில், சில நாளிதழ்கள்கூட, 'சீரணிப் படை' என்றே எழுதிவருகின்றன!

'கலியாண எழவு' என்று சிலர் சலித்துக் கொள்வார்கள்! அதைப்போலத்தான் இருக்கிறது—'சீரணி'யை, 'சீரணிப் படை' என்று கூறுவதும், எழுதுவதும்!

மாப்பிள்ளை அழைப்பினை, பெண் வீட்டார் படைகொண்டு வருவதாக யாரும் தவறாகக் கொள்வதில்லை! 'சீரணி' என்ற மங்கலமான சொல்லைக் கண்டு வீணான ஒரு பீதியை ஏற்படுத்துவதில் வெங்கட்ராமனும் தனது கட்சியுடன் ஒத்துழைத்திருக்கிறார்!

"சர்வாதிகார நாடுகளில்தான் இதுபோன்ற படைகள் ஒத்துவரும்" என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்—முன்னாள் தொழிலமைச்சர்!

காங்கிரசுக் கட்சியினாலேயே இங்கே சர்வாதிகார ஆட்சி நடத்த முடியாமல் போய்விட்ட பிறகு, அவருக்கு, 'சர்வாதிகார ஆட்சி தோன்றிவிடக்கூடும்' என்ற அச்சமே தேவையில்லை!

அரசியல் சட்டம்—கட்சி அமைப்பு—பாராளுமன்ற சனநாயகம்—இத்தனைக்கும் மத்தியில் கழக அமைச்சரவை அறிமுகப்படுத்தியிருக்கும் 'சீரணி', சர்வாதிகாரப் போக்கினைக் கொடுத்துவிடுமென கருதி வெங்கட்ராமன் பேசியிருப்பது, 'அரசியல் பார்வை'யுடன் அவர் பிரச்சினையை அணுகியிருக்கிறார் என்பதனைத்தான் காட்டுகிறது!

மாற்றுக் கட்சிகளைக்கொண்ட மாநில அரசுகளிடம் மத்திய அரசு மனப்பூர்வமான ஒத்துழைப்பினைக் காட்டும் போக்கு ஏற்படாத நிலையில்தான், அதிகாரக் குவியல்கள் பற்றியும், அதற்கு ஒரு சட்டபூர்வமான பரிகாரம் காணவேண்டிய அவசியம் பற்றியும் அண்ணா அவர்கள் அவ்வப்போது வலியுறுத்தி வருகிறார் என்பதனை, வெங்கட்ராமன்கூட உணர்ந்துகொள்ள முடியாதது வியப்பாகவே இருக்கிறது!

தூத்துக்குடி, சேலம் திட்டங்களை **வலியுறுத்தும்** ஜூலை 23-ம் நாளுக்கு, **'போராட்டம்'** என்ற 'ஜனரஞ்சகமான' பெயரைக் கொடுத்திருக்கும் குற்றத்துக்கு இவரும் ஆளாகியிருக்கிறார்!

"மாநிலத்துக்கான அதிக நிதிகள் பெற, போராட்டம் வேண்டாம்; அதிகார முறைமைகள் பற்றிப் பேச ஒரு கமிஷன் அமைக்கும்படி அண்ணா வற்புறுத்தலாம்" என்று வெங்கட்ராமன் பேசியதற்குப்பின், சில மணி நேரங்கள் கழித்து வந்த மாலைப் பத்திரிகைகளில் வெளியாகியுள்ள **'மத்திய—மாநில அரசுகளின் உறவு முறைகளைப் புதிய சூழ்நிலைகளில் ஆராய்வதற்கான கமிஷன் அமைப்பு யோசனையை இந்திரா காந்தி நிராகரித்தார்"** என்ற செய்தியை, அவரது சிந்தனைக்கு வைக்கலாம்!

கீழ் சட்டசபையில் மற்றொரு முன்னாள் அமைச்சர், நிதி நிலை அறிக்கையின்மீது பேசியிருக்கிறார்; 'அது இல்லை—இது இல்லை' என்ற பட்டியலே அவரது பேச்சில் நிறைய இருக்கிறது!

அமெரிக்க அமைச்சர் அடிலாய் ஸ்டீவன்சன், மேடைகளில் கூறும் கதையொன்றுதான் நினைவுக்கு வருகிறது;—ஒரு சிறுவன் படம் வரைந்து கொண்டிருந்தான்; பெரியவர் ஒருவர் வந்து, 'என்ன தம்பி வரைகிறாய்?' என்று கேட்டார்; 'இது, கடவுளின் படம்' என்றான் சிறுவன்; 'அப்படி இல்லையே' என்றார் கேட்டவர்; அப்படியானால், நீங்கள் கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா?' என்று மறுகேள்வி கேட்டான் சிறுவன்; 'இல்லையே' என்று நழுவினார் பெரியவர்! இது, கதையின் முழுப் பகுதி அல்ல—முக்கால் பகுதிதான்; ஆனால், இதுபோதும்—பூவராகனுக்குப் பதில் சொல்ல!

"நிதி நிலை அறிக்கை, ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு வழிவகை காட்டுவதாக இல்லை; அரசாங்க ஊழியர்களுக்குத் திருப்தி அளிப்பதாக இல்லை" என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தியிருக்கிறார்—முன்னாள் செய்தித்துறை அமைச்சர்!

இந்த இரண்டையும் கொண்ட நிதிநிலை அறிக்கை எப்படி இருக்கும் என்பது, அவருக்கு ஒரு வேளை அறிமுகமாகாமல் இருக்கலாம்; அல்லது அனுபவத்தில் தெரிந்துகொள்ள முடியாததாக இருக்கக்கூடும்!

ஆட்சியிலிருந்து வெளியேறிய நூறு நாட்களுக்குள், எப்படித் திடீரென்று அரசு ஊழியர்கள் மீது அவருக்கு அக்கறை வந்தது என்பது குறிப்பிடத்தக்க வியப்பாக இருக்கிறது! 'அரசாங்க ஊழியர்' என்ற ஒரு வகையினர், இப்போதுதான் வந்திருக்கின்றனர் என்று பூவராகன் தெரிந்துகொண்டாரா அல்லது 'இதற்கு முன் இல்லை' என்று நினைத்துக்கொண்டிருந்தாரா என்பது, அவரைத்தான் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்!

பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலையில் ஆரம்பித்து மணலி எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைவரை பட்டியல் கொடுத்து, 'இது போதாதா? சேலமும், தூத்துக்குடியும் இல்லை என்பதற்காகப் போராட்டமா?' என்று கேட்டிருக்கிறார் பூவராகன்!

போன வேளையில் சாப்பிட்டாகிவிட்டது என்பதற்காக, அடுத்த வேளை 'பசிக்கிறதே' என்று கூறாமல் இருந்தால், சேலமும் தூத்துக்குடியும் வேண்டாம் என்று ஒதுக்கிவிடலாம்!

காங்கிரசு மாநில அரசுகளே ஆங்காங்கோ புதுடில்லிக்கு எதிராக—வேண்டியதைப் பெற—'போர்க்குரல்', 'கண்டன முழக்கம்' எழுப்பியதை, ஐந்தாண்டுக் காலமே அனுபவம் பெற்றதால் பூவராகனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைதான்;

திங்களன்று நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டிருக்கும் கழக உறுப்பினர்கள் **ஏ.எம். இராசா, என். வீராசாமி, ஜே.எஸ். இராசு, ஓ.பி. இராமன், ஏ. கருப்பையா, என். நாச்சிமுத்து, ஏ.கே. மூர்த்தி, ஏ.எல். சுப்பிரமணியம், என். கிருஷ்ணன், பி. எஸ். சண்முகம், ஏ. வெள்ளதுரை, சி.கே. சின்னராசு, பெ. சீனிவாசன், பி. பெரியசாமி, ஆர்.என். அரங்கநாதன், எஸ். கே. வடிவேலு** ஆகியோர், தொகுதித் தேவைகள் முதல், பட்ஜெட் உணர்த்தும் மத்திய—மாநில உறவு முறைகள் வரை வலியுறுத்திப் பேசியிருக்கின்றனர்.

"எதற்கெடுத்தாலும் போராட்டமா?" என்று—இல்லாத ஒன்றைப் பெரிதுபடுத்தும் காங்கிரசுக்காரர்கள், 'உரவிலை அதிகரிப்பு—விவசாயப் போனசு குறைப்புப் பற்றி மாநில அரசு உரிய முறையில் புதுடில்லிக்குக் **கண்டனக் குறிப்பு** அனுப்பியிருக்கிறது' என்ற உணவு அமைச்சரின் அறிவிப்பைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

காவிரி நீரை சென்னை நகருக்குக் கொண்டுவரும் திட்டத்தின் மூலம் கழக அமைச்சரவையின் ஆயுட்காலத்தைக் கண்டுகொள்ள ஆர்வம் காட்டியிருக்கும் கே. விநாயகத்துக்கு, 'இதுபோன்ற இன்னும் பல திட்டங்களை நிறைவேற்றிவிட்டுத்தான் போவோம்' என்ற பொதுப்பணித் துறை அமைச்சரின் பதில், சரியான விளக்கமாக இருக்கிறது!

காவிரி நீர்த் திட்டத்தைக் குறைத்து மதிப்பிட்டாரா அல்லது கழக அமைச்சரவையின் காலத்தைக் குறைத்துக் கணித்தாரா என்பது தெரியப்படுத்தப்பட வேண்டியதில்லை; இந்தப் பிரச்சினையில் காட்டியிருக்கும் அவரது **அரசியல் மனப்போக்கு,** மக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்றாக இருக்கிறது!

வணிகர்களுக்குக் கடும் எச்சரிக்கை

புதுடில்லி, ஜூன் 25—

"வணிகர்களின் நடத்தையைப் பொறுத்து உணவுப் பொருட்களின் வாணிபத்தை அரசு மேற்கொள்வது பற்றிய முடிவு அமையும்" என்று மத்திய உணவு அமைச்சர் ஜெகஜீவன்ராம் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது :—

"உணவு விவகாரத்தில் தொல்லைப்படும் இடங்களுக்கு அரசு உணவு அனுப்பும்; வணிகர்களோ அதிக இலாபம் கிடைக்கும் இடம் எதுவோ அங்கு உணவை அனுப்புவர்; இதுதான், உணவு விவகாரத்தில் அரசுக்கும்—தனிப்பட்ட வணிகர்களுக்கும் உள்ள இன்றியமையாத வேறுபாடு ஆகும்.

அரசுத் துறையில் ஊழல் இருப்பதாகத் தெரிவித்து, உணவுப் பொருள் வாணிபத்தில் அரசு ஈடுபடுவதை எதிர்ப்பதில் பொருள் இல்லை.

சில அலுவலர்கள் ஊழல் உடையவர்களாக இருந்தாலும், அவர்களைத் தண்டிக்க அரசால் முடியும்; ஆனால், கொள்ளை இலாபமடித்த எந்த வணிகர் மீதும், உணவுப் பொருள் வணிகர் சங்கம் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

உணவுத் துறையில் இருக்கும் அனைவரும் முட்டாள்கள் என்று வணிகர்கள் கருதிவிடக்கூடாது. அத்தகைய பிரமையான எண்ணம் வணிகர்களுக்குத் தீமையைத்தான் ஏற்படுத்தும்."

தலைமைவகிப்பவருக்கே கூட்ட நடவடிக்கை புரியவில்லை!

இந்தி வெறியைக் காட்டிக்கொண்டனர் இந்திராவும் நந்தாவும்!

புதுடில்லி, ஜூன் 16—

தேர்தல் முடிவு — காங்கிரசுக் கட்சியின் நிர்வாக அமைப்பு—பாங்கிகளைச் சமுதாயத்தின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வருதல் போன்ற இன்றியமையாத சிக்கல்கள் பற்றி அனைத்திந்தியக் காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் பேசியவர்களில் பெரும்பாலோர் இந்தி மொழியிலேயே பேசியதால், தென்னகத்திலிருந்து சென்றவர்களில் பெரும் பகுதியினர் கூட்டத்திலிருந்து வெளியேறினர்.

அவர்கள் வெளியேறியதற்குக் காரணம், 'இந்தியில் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லையே' என்பதுதான்!

நந்தா நன்றாக ஆங்கிலத்தில் பேசக்கூடியவர்; ஆனால் அவர், இந்தியில் பேசினார்; 'ஆங்கிலத்தில் பேச வேண்டும்' என்று கேரளத்தைச் சேர்ந்த ஸ்டீபன் கேட்டார்; ஆனால் நந்தா, இந்தியில்தான் பேசினார்.

"தென்னகத்தின் பிரதிநிதிகள் புரிந்துகொள்ள வேண்டியிருப்பதால், ஆங்கிலத்தில் பேசப் போகிறேன்" என்று தலைமை அமைச்சர் இந்திரா, இந்தியிலே கூறினார்.

உடனே, தென்னகத்திலிருந்து சென்ற பிரதிநிதி ஒருவர் எழுந்து, அதற்கு நன்றி தெரிவித்தார்.

"இப்போது நான் இந்தியில் பேசியதைப் புரிந்துகொண்டவர்கள், இதற்கு மேலும் நான் இந்தியில் பேசுவதையும் புரிந்துகொள்ள முடியும் இல்லையா?" என்று இந்திரா கேட்டார்.

தென்னகத்திலிருந்து சென்ற பெண்மணி ஒருவர், 'அனைத்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவர் காமராசருக்கே இந்தி தெரியாது; இங்கு நடைபெறும் நடவடிக்கைகளில் பெரும் பகுதியானவற்றை அவர் அறிந்துகொள்ள முடியவில்லை; காங்கிரசுக் கட்சித் தலைவர் காமராசருக்கு மரியாதை காட்டுவதற்காகவாவது ஆங்கிலம் தெரிந்தவர்கள் இந்தியில் பேசாமல் ஆங்கிலத்தில் பேசியிருக்கலாம்" என்று கூறினார்.

நடக்க இருப்பவை

29--6--67

சென்னை முதல் வட்டம்

மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில் இரவு 7 மணிக்கு செரியன் நகர்த் திடலில்; தலைவர்: எம். ஏ. அனீபா; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, ஏ. கே. ஏ. அப்துஸ்சமது எம்.ஏ., எம்.பி., க. அறிவழகன் எம்.ஏ., எம்.ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., திருச்சி சௌந்தரராசன், து. கோவிந்தசாமி, மா. அரங்கநாதன்.

பர்மா அரிசி தருவிக்கும்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புக்கும், மேம்பாட்டுக்கும் ஊறு விளைவிக்கக்கூடிய எந்தச் செயலையும் அனுமதிக்காது.

"பர்மாவில் இவ்வாண்டு உற்பத்தி குறைந்திருப்பதால், விலை சற்று அதிகமாக உள்ளது,

அண்ணா:—"அரிசி விலை மலிவாகக் கிடைக்கிறதா என்பதல்ல பிரச்சினை; எங்கே கிடைக்கிறது என்பதுதான். பர்மாவிலிருந்து நெடுங்காலமாக இந்த நாட்டுக்கு அரிசி வந்துகொண்டிருந்திருக்கிறது. இந்த ஆண்டு போதிய விளைச்சல் இல்லாததால், இப்போது அங்கு அரிசி விலை ஏறியிருக்கிறது. உலகிலேயே பர்மா அரிசிதான் விலை குறைவானதாகும். முன்பு பர்மா அரிசி இங்கு வந்துகொண்டிருந்தபோது ரூபாய்க்கு 5 படி—6 படி என்றுகூட விற்றது நினைவிருக்கலாம். இப்போது அங்கே உழவுத் தொழிலில் போதிய அளவு அக்கறை காட்டி ஈடுபடாததால்தான் விளைச்சல் குறைந்து, அதனால் விலையும் கூடியிருக்கிறது."

முதலமைச்சர் அண்ணா

சுற்றுப்பயணம்

29-6-67 காலை 6 மணி: திருச்சி;
மாலை 3 மணி: புத்தனம்பட்டி—நேரு கல்லூரித் திறப்பு விழா;
இரவு 7 மணி: திருவெறும்பூர்—தமிழ் மன்றக் கூட்டம்.

நீத்தார் நினைவு

பண்ணுருட்டி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் எஸ். இராமச்சந்திரன் அவர்களின் தந்தையார் 13—6—67-ல் இயற்கையெய்தியதையொட்டி, 28—6—67 காலை 10 மணியளவில் கடலூர் வட்டம் புலியூர் கிராமத்திலுள்ள அன்னார் இல்லத்தில் நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.